**நோக்கத்தில் தெளிவு! செயலில் உறுதி!!**

**வங்கி ஊழியர்களின் வெற்றிப் பயணம் தொடரட்டும்!!!**

**- தோழர் கே.ஜே. ஜோசப்**

**அருமை நண்பர்களே! அன்புத் தோழர்களே!!**

வங்கி ஊழியர்களாகிய உங்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!! மே 30, 31 இரண்டு நாட்கள் - 48 மணிநேர நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை மகத்தான வெற்றியாக்கிய உங்களது ஒற்றுமைக்கும் எழுச்சிக்கும் தலை வணங்குகிறேன்!

வாழ்க்கையின் அந்திமக் காலத்தில் இருப்பினும் உங்களின் நாடித்துடிப்பை உணர்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். UFBU-ன் அறைகூவலுக்கிணங்க, வீதிகளில் இறங்கி, உரத்து முழங்கிய உங்களை, பெருமை பீறிட, மகிழ்ச்சி பொங்கிட மீண்டும் வாழ்த்துகிறேன்!

தோழர்களே! நம் நாட்டில் இன்று காணப்படும் சில விநோதங்களை நீங்கள் அறிவீர்கள். ஏனையோருடன் ஒப்பிடும் போது, மிகுந்த வசதிகளில் திளைக்கும், மாநில ஆளுநர்கள், நீதிபதிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஊதியங்கள் படிகள் பன்மடங்கு உயர்த்தப்படுகின்றன. ஆனால் வங்கி ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான ஊதிய உயர்வு மட்டும் மறுக்கப்படுகிறது. இது வங்கி நிர்வாகங்களின் கருணையால் பெறுவதல்ல. ஐந்தாண்டுக்கு ஒருமுறை சட்டப்படி தரப்பட வேண்டியது. இப்படி அநீதியாக நடத்தப்படுவதற்கு வங்கி ஊழியர்கள் செய்த பாவம் தான் என்ன? ஆட்சியாளர்கள் விளக்குவார்களா? வங்கித்துறையின் உண்மையான 'செயல்படும் முதலீடாக' வங்கி ஊழியர்கள் விளங்குவதுதான் அவர்கள் செய்துள்ள குற்றமா?

சமூகத்தின் பொறுப்புணர்வுமிக்க, விழிப்புணர்வுள்ள போர்க்குணம் கொண்டவர்களாக வங்கி ஊழியர்கள் திகழ்வதுமே ஆட்சியாளர்களுக்கு எரிச்சலூட்டுகிறது. பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் உறுத்துகிறது.

இதன் மறைமுக அறிகுறியாகத்தான், வங்கிகளின் நிர்வாகக் குழுவில் மத்திய அரசால் சட்டப்படி நியமிக்கப்பட வேண்டிய ஊழியர் பிரதிநிதிகளை பல வங்கிகளிலும் நியமிக்காமல், காலதாமதம் செய்து, அடாவடியாக நடந்து கொள்கிறது, மோடி அரசு.

இத்தகைய ஆத்திரமூட்டல்களைத் தொழிற்சங்க இயக்கம் தொடர்ந்து சந்தித்து வந்துள்ளது. இன்றைய தேவை, நமது ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்துவதே. நமது படைக்கலன்களைக் கூர்மையாக்கிக் கொள்வதே. இறுதியில் வெற்றிக் கனியைப் பறிப்போம் என்கிற நம்பிக்கையோடு முன் செல்வதே நமது கடமை.

எஃகு போன்ற நமது ஒற்றுமையும், எதிர்வரும் தடைகளைத் தகர்க்கும் இயக்கத்தின் வலிமையும் ஒன்றிணையும்போது, அரசின் ஆணவம் தூளாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

நாட்டின் பொருளதாரத்தையே நிலைகுலைய வைக்கும் 'பிரம்மாஸ்திரம்' நம்மிடமிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கிருந்தாலும், ஆட்சியாளர்களின் அலட்சியப் போக்கு நீடித்தால், அதைக் கையில் எடுக்கும் அவசியமேற்படலாம். அத்தகைய மோசமான சூழ்நிலைக்கு நம்மைத் தள்ளக்கூடிய முட்டாள்தனத்தை மோடி அரசு செய்யாது என நம்புகிறேன்.

இது வெறும் வாய்ச்சவடாலல்ல. விழிப்படைந்துள்ள, செயல்வேகமிக்க லட்சக்கணக்கான வங்கி ஊழியர்களின் நெஞ்சங்களின் கனன்று கொண்டிருக்கும் தணலின் தகிப்பை உணர்ந்தே கூறுகிறேன். பதவி சுகத்திலும், அதிகார மயக்கத்திலும் ஆழ்ந்துள்ள உன்மத்தர்களான ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளட்டும்!

அதே வேளையில் வங்கி ஊழியர்கள் மத்தியில் ஒருசில மூலைகளிலிருந்து வெளிப்படும் சுருதிபேதமான குரல்களையும் கேட்கிறேன். சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரப்பப்படும் சில கேள்விகளையும் அறிகிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்படுவதைப் போன்ற நிதிக்குழு வங்கி ஊழியர்களுக்கும் வேண்டும், அதன்மூலம் வங்கி ஊழியர்களும் அதிக ஊதியம் பெற வாய்ப்புண்டு என்று வாதிடப்படுகிறது.

மத்திய அரசு ஊழியர்களுக்கான அந்த நிதிக்குழு அறிக்கையை எத்தனை பேர் ஊன்றிப்படித்துள்ளோம். ஊதிய உயர்வுக்காக பல்வேறு துறைசார்ந்த தொழிற்சங்க இயக்கங்கள் கடந்து வந்துள்ள வரலாறு குறித்த தெளிவு நமக்குள்ளதா?

ஆலைத் தொழிலாளர்கள், ரயில்வே, தபால், தொலைத்தொடர்பு, மத்திய மாநில அரசுகள், பொதுத்தறை, வங்கி காப்பீட்டுத்துறை எனப் பல்வேறு துறைகளின் தொழிற்சங்கங்கள் தங்களது ஊதிய மற்றும் பணி நிலைமைகளை உயர்த்திட, நடத்தியுள்ள போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவை. நிர்வாகங்களின் தன்மை, கொடுக்கும் சக்தி ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுடன் மற்றொன்றை ஒப்பிட முடியாதவை.

எனவே, பல்வேறு துறைகளில் ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்ட வரலாற்றை, ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்ட பின்னணியை அலசி ஆய்ந்து, புரிந்து கொள்ள வேண்டிய தேவை, தொழிற்சங்கங்களை வழிநடத்தும் பொறுப்பிற்கு வர விரும்புவர்களுக்கு மிக அவசியமான கடமையாகிறது. அப்போதுதான் வங்கி ஊழியர்களின் ஊதிய ஒப்பந்தத்தை உருவாக்குவதிலுள்ள சிக்கல்களைப் புரிந்து கொள்ள முடியும்.

வங்கி ஊழியர்கள் மனதில் கொள்ளவேண்டிய மற்றொரு முக்கிய அம்சத்தைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்தியத் தொழிற்சங்க வரலாற்றில், 1966 அக்டோபர் 19ம் நாளில் உருவாக்கப்பட்ட முதலாவது இருதரப்பு ஒப்பந்தம் தான் நாட்டின் முதலாவது ஒரு தொழில் சார்ந்த ஊதிய ஒப்பந்தமாகும்.

நீதிமன்றங்கள், முத்தரப்பு நடுவர் மன்றங்கள் என்ற நெடிய காலகட்டத்தைத் தாண்டி, எண்ணற்ற வேலைநிறுத்தப் போராட்டங்களை மேற்கொண்டு, இறுதியாக நேரடியாக வங்கி நிர்வாகங்களுடன் பேசித்தீர்க்கும் கூட்டு பேர உரிமையின் மூலமாகப் பெறப்பட்ட அரிய 'பொக்கிஷம்' இருதரப்பு ஒப்பந்தமாகும்.

அந்த இமாலயச் சாதனையைப் படைத்துள்ள வங்கி ஊழியர்கள், இருதரப்புப் பேச்சு வார்த்தைகளுக்குச் சமாதிகட்டும் ஊதியக்குழு என்ற மாரீச மானைத் தேடி ஓடக்கூடாது என்பதைப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

‘‘அரிச்சுவடியின் கடைசி எழுத்துக்களை அறிந்துள்ள அளவிற்கு தொடக்க எழுத்துக்களை அறியாமலிருப்பதைப் போல, பல விஷயங்களில் நாம் இருக்கிறோம்’’ என்ற அறிஞர் பெர்னாட் ஷா கூறியுள்ளது இன்ற நாம் விவாதிக்கும் பிரச்சனைக்கும் பொருந்தக்கூடியது.

அடுத்து தலைமுறை இடைவெளி சம்பந்தமாக எழுப்பப்படும் ஒரு கேள்வி. தொழிற்சங்கங்களை வழிநடத்த ஓய்வுபெற்ற ஊழியர்கள் எதற்கு, அவர்கள் தொழிற்சங்கப் பணியிலிருந்தும் ஓய்வு பெற்றுக் கொள்ளட்டும் என்பதே அது.

இன்று வங்கித் தொழிற்சங்கங்களை வழிநடத்தும் பல ஓய்வுபெற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், வெளியாட்களல்ல. பல்வேறு வங்கிகளில் பணியாற்றி, வங்கித் தொழிலின் நுட்பங்களை அறிந்தவர்கள். வங்கிகளில் சேர்ந்த காலந்தொட்டு தொழிற்சங்கப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, இயக்கத்தை கட்டி வளர்த்தவர்கள். இன்று வங்கி ஊழியர்கள் அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு UFBU-இன் முதுமையும் இளமையும் கலந்துள்ள தலைமை முதிர்ச்சியும், வேகமும் இணைந்தே பயணிக்கக் கூடியது. எனவே, நுனி மரத்தில் அமர்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டுகின்ற அறிவீனத்திற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

அடுத்ததாக, தீவிரமான போராட்ட வடிவங்களில் இறங்குவதையும், அதுவும் உடனே செயல்படுத்துவதையும் குறித்து வலியுறுத்தப்படுகிறது.

நமது நாட்டில் நிலவும் சூழல்களைச் சற்று கவனித்துப் பாருங்கள். பல வங்கிகள் நலம் குன்றி, தீவிர சிகிச்சைப் பிரிவில் மயக்க நிலையிலுள்ளன. இந்திய வங்கிகள் சங்கத்திற்கு தலைவர் நியமிக்கப்படாமலுள்ளது. மத்திய நிதியமைச்சர், மருத்துவமனையிலிருந்து தற்போதுதான் திரும்பியுள்ளார். நாட்டின் பிரதமரோ, உள்நாட்டின் பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞனையே இல்லாதவராக, உலகத் தலைவராக வலம் வந்து கொண்டிருக்கிறார். மக்களைப் பிரிப்பதிலும், அவர்களின் கவனத்தை திசை திருப்புவதிலும் கைத்தேர்ந்த கலைஞராகத் திகழ்கிறார். 2019ல் நடைபெறவுள்ள அடுத்த பொதுத்தேர்தல் குறித்தே அவர் கவலையிலுள்ளார்.

அரசின் கொள்கைகள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமானதாகவும் தொழிலாளர்களுக்கு எதிரானதாகவும் உள்ளது என்பதை ஆளுங்கட்சியின் சார்பான பாரதிய மஜ்தூர் சங்கமே ஒப்புக் கொண்டுள்ளது.

பொதுமக்களோ, திடீரென வெடிக்கும் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு மட்டுமே அசைந்து கொடுக்கின்றனர். உண்மைகளைத் திரித்துப் பேசுவதில் ஆட்சியாளர்கள் தேர்ந்தவர்களாகி விட்டார்கள். மக்களைத் திசை திருப்பும் வேலையைத் திறமையாகச் செய்து, ஆட்சியில் நீடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய இடர்கள் நிறைந்த சூழலில் எந்த முடிவை எடுப்பதற்கு முன்பும், தீர யோசித்தே செயலில் இறங்க வேண்டும். ஒரு மகிழுந்தை இயக்கியவுடன் டாப் கியரில் ஓட்டக்கூடாது, என்பதை நன்கு அறிவோம். சாலையின் நிலை, செல்லவேண்டிய இடம், தூரம் என்பனபற்றி ஆலோசித்தே வாகனத்தை ஓட்ட வேண்டும். இது நமது தொழிற்சங்கப் போராட்டத்திற்கும் பொருந்தி வரக்கூடியது.

நான், ஒரு அடிமட்ட போர்வீரனாக எழுபது ஆண்டுகளுக்கு மேல் இந்த இயக்கத்துடன் பயணித்துள்ளேன். இன்று சந்தித்துக் கொண்டிருப்பது போன்ற மிகக் கடினமாக சூழலை முன் எப்போதும் நாம் எதிர்கொண்டதில்லை என்பதை எனது அனுபவத்திலிருந்து கூற விரும்புகிறேன்.

நமது இன்றைய தலையாய தேவை ஒற்றுமையே! போர்க்கலன்களைத் தயாராக வைத்திருப்பதே! களத்தில் இறங்க விழிப்புணர்வுடனிருப்பதே! சரியான நேரத்தில் நமது போர் முழக்கம் ஒலிக்க வேண்டும். நாம் போராட்டத்தில் எழுப்பும் உரத்த குரல், அரசின் தலையில் இடியென இறங்க வேண்டும். ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் அவர்களை அப்போதுதான் விழிக்கச் செய்ய முடியும்.

"இந்திய வங்கிகள் சங்கம்" (IBA) என்பது ஒரு முகமூடியே. அதன் உண்மையான முகம் நிதியமைச்சகமே! நாம் போராட வேண்டிய எதிரியைச் சரியாக இனங்காண வேண்டும். ஒற்றுமையை வலுப்படுத்தி களமிறங்க வேண்டும். எதிர்வரும் தடைகளை உடைத்து, நமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் உள்ளார்ந்த வலிமையும் களம் பல கண்ட பட்டறிவும் நமக்குண்டு.

நம்மைச் சூழ்ந்துள்ள கருமேகங்கள் கலைந்திடக் காலதாமதமாகலாம். வங்கிகளில் புதிதாகப் பணியில் சேர்ந்துள்ள இளந்தோழர்கள் இதைப்புரிந்து, தொழிற்சங்கத் தலைமையுடன் ஒத்துழைப்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்குண்டு.

குழப்பங்களிலிருந்து தெளிவு பெற்று, UFBU பதாகையின் கீழ் அணிதிரள வேண்டியது காலத்தின் தேவை. நமது ஜீவ மரணப்போராட்டங்களை முகநூல் வழியே நடத்த முடியாது.

பல சிற்றாறுகள் இணைந்து கரை புரண்டோடும் பேராறாக மாறுகிறது. நோக்கத்தில் தெளிவும், செயலில் உறுதியும் கொண்ட வங்கி ஊழியர்கள், அதிகாரிகளின் ஒன்றுபட்ட பேரியக்கம் பீடுநடைபோட, அதனுடன் உங்களைப் பிணைத்துக் கொள்ளுங்கள். என்னையும் உங்களையும சுயமரியாதைமிக்கவர்களாக உயர்த்தியுள்ள இயக்கத்தின் பயணத்தில் இணைந்து உங்களின் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

கருநீல மலைகளைத் தாண்டி, பசுமை போர்த்திய பள்ளத்தாக்குகளைக் கடந்து, ஆர்ப்பரிக்கும் கடலலைகளுக்கு அப்பால், கிழக்கு வானின் கருக்கல் நீங்க, சிவந்த விடியல் நமக்கானது! உழைக்கும் மக்களுக்கானது!

தோழர்களே!

**AIBEA - செம்பதாகையை உயர்த்திப் பிடியுங்கள்!**

**UFBU - ஒற்றுமைப் பதாகையை உயர்த்திப் பிடியுங்கள்!**

**தொடர்ந்து போராடுவோம் - படிப்படியாய் முன்னேறுவோம் !**

**இறுதி வெற்றி நமதே!**

தோழமையுடன் உங்கள்

**ஜோ**

**(கே.ஜே. ஜோசப்)**
முன்னாள் தலைவர்
TNBEF

**தமிழாக்கம் : ப.பா. ரமணி**

---


# தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

(AIBEA உடன் இணைக்கப்பட்டது)

சிங்கப்பூர் பிளாசா, 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001